**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No : 17/2023** **நாள் 26.02.2026.**

**வாசா.1, காயத்ரி**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 4, 6 முதல் 11 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்குரையில் சொல்லிய சங்கதிகளையும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சி பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளையும் வழக்கறிஞர் அவர்களுக்கு நான் தான் தகவல் சொன்னேன். நான் பி.எஸ்.சி படிப்பை படித்துள்ளேன்.வழக்கின் 3ம் எதிர்வாதி சிவக்குமார் என் தகப்பனார். வழக்கின் 3ம் வாதியான இளவர் முத்துக்குமாரின் இயற்சை பாதுகாவலர் தாயாருமான விசாலாட்சி என்பவர் என் தாயார். இந்த வழக்குரை 1ம் இலக்க சொத்தானது ஆதியில் என்னுடைய அப்பாவின் தாத்தா சொக்கையா செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று நான் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதாவான வாசாஆ.1ல் சொக்கையா செட்டியாருக்கு எத்தனை மனைவிகள் அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். சொக்கையா செட்டியாருக்கு 2 மனைவிகள் என்றும் அதில் ஒரு மனைவி பெயர் லட்சுமியம்மாள் என்றும் 2வது மனைவி பெயர் அங்காளம்மாள் என்று சொன்னால் அது சரிதான். சொக்கையா செட்டியார் மற்றும் லட்சுமியம்மாளுக்கு 3 ஆண்மக்கள் என்றும் அவர்கள் முறையே சொக்கையா, ராமகிருஷ்ணன், நடராஜன் என்று சொன்னால் அது சரிதான் . சொக்கையா செட்டியார் மற்றும் அங்காளம்மாளுக்கும் பிறந்த குழந்தைகள் ராமுத்தாய், அமராவதி என்று சொன்னால் சரிதான். என் அப்பாவின் தாத்தா சொக்கையா செட்டியாருக்கு வழி வந்த மேற்படி 7 நபர்களுக்கும் இடையில் பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகம் ஆகிவிட்டதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். அந்த 7 நபர்களுக்குள் சொத்துக்களை யார் யாருக்கு எப்படி பிரித்துக்கொண்டார்கள் என்று கேட்டால் சொக்கையா செட்டியாருக்கு பயர் ஆபிசும், ராமகிருஷ்ணன் என்பவருக்கு புஞ்சை நிலங்களும், நடராஜனுக்கு தீப்பெட்டி ஆபிசும் என்று மட்டுமே எனக்கு தெரியும். ராமுத்தாய், அமராவதி ஆகியோருக்கும் மற்றும் மேற்படி ஆண்மக்களுக்கும் இடையில் எந்தவிதமான பாக பிரிவினையும் ஏற்படவில்லை என்று நான் சொல்கிறேன். சொக்கையா செட்டியாருக்கு பயர் ஆபிசும், ராமகிருஷ்ணன் என்பவருக்கு புஞ்சை நிலங்களும், நடராஜனுக்கு தீப்பெட்டி ஆபிசும் பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லும் போது அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. அவர்களுக்கு இடையில் எந்தவிதமான பாகமும் ஏற்படவில்லை என்பதால் தான் அவர்களுக்குள் எந்தவிதமான ஆவணங்களும் ஏற்படவில்லை என்பதால் தா்ன நான் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. உண்மையிலேயே அவர்களுக்குள் பாகம் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்குள் ஆவணங்கள் உற்பத்தி ஆகியிருக்கும் என்றும் அவ்வாறு பாகம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் தான் ஆவணங்கள் எதுவும் உற்பத்தி ஆகவில்லை என்று

சொன்னால் அப்படியில்லை. என்னுடைய அப்பாவின் தாத்தா சொக்கையா செட்டியாருக்கு பிராது 1ம் அயிட்ட சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று நான் சொல்லும் போது சொக்கையா, ராமகிருஷ்ணன், நடராஜன், ராமுத்தாய், அமராவதி ஆகியோர்களை இவ்வழக்கில் நாங்கள் எதிர்வாதிகளாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் அது சரியல்ல. அவர்களை சேர்க்காததால் இவ்வழக்கானது அவசியமான தரப்பினரை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகியுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. காலஞ்சென்ற ஆதியில் இருந்த சொக்கையா செட்டியாரின் முதல் ஆண்வாரிசு தான் என் தாத்தா சொக்கையா என்றால் சரிதான். சொக்கையா செட்டியார் மற்றும் மங்கம்மாளுக்கு 2 பெண்குழந்தைகள் 5 ஆண்மக்கள் என்று சொன்னால் அது சரிதான். அவர்களில் என் தகப்பனார் சிவக்குமார் 5வது ஆண்குழந்தை என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தானது என் தாத்தா சொக்கையா செட்டியாரின் சுய சம்பாத்தியத்தின் மூலமாக அவரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்று நாங்கள் வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ள போது அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. இவ்வழக்கில் என் தகப்பனார் சிவக்குமார் என்பவர் 3ம் எதிர்வாதியாக காட்டியுள்ளேன். அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்க்கவில்லை. அதில் அவர் என்ன விபரம் சொல்லியுள்ளார் என்றும் நான் தெரிந்து கொள்ளவில்லை. என் வழக்கறிஞர் மூலமாக இவ்வழக்கின் 3ம் எதிர்வாதியான என் தகப்பனார் என்ன சொல்லி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேன். என் தகப்பனார் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையில் நாங்கள் இந்த வழக்குரை சொத்தில் பாகம் கோருவதில் என் தகப்பனார் அவருக்குரிய 1/7 பங்க பாகத்தை பொறுத்து என் தகப்பனார் அவருடைய சகோதரரான பாஸ்கரன் என்பவரிடமிருந்து ரூ.45 லட்சத்தை பெற்றுக்கொண்டு அவருக்குரிய பாகத்தை பொறுத்து ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு முன்பு நாங்களும் இவ்வழக்கின் 3 முதல் 11 எதிர்வாதிகள் அனைவரும் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். 2015ம் ஆண்டுக்கு பிறகு என் அப்பா, என் அம்மா, நான், மற்றும் என்னுடைய தம்பிகள் மற்றும் தங்கைகள் கூட்டுக்குடும்பத்தில் இருந்து பிரிந்து தனியாக தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் அது சரிதான். இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்த ஆண்டான 2023ல் நாங்களும் இந்த வழக்கு எதிர்வாதிகளுடன் சேர்ந்து ஹிந்து அபிபக்த கூட்டுக்குடும்பமாக சேர்ந்து வாழ்ந்து வரவில்லை என்றால் அது சரிதான்.என் அப்பாவும் என்அம்மாவும் சேர்ந்து 16.12.2015ம் ஆண்டு என் அப்பாவுக்கு பங்க பாகத்தில் கிடைத்த ரூ.45 லட்சத்தில் முதல் தவணையாக ரூ.15 லட்சத்தை வாங்கி அதை வைத்து தான் சிவகாசியில் அம்பிகா பயர் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி அம்பிகா பயர் ஒர்க்ஸ் என்பதின் GST Number ஆனது என் தாயார் விசாலாட்சி என்பவர் பெயரில் தான் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி அம்பிகா பயர் ஒர்க்ஸின் கணக்கு

வழக்குகள் அனைத்தும் என் தாயார் விசாலாட்சி பெயரிலும் அந்த நிலத்தின் உரிமையாளர் பெயரிலும் தான் இருந்து வந்தது என்றால் சரிதான். 16.12.2015 ம் தேதியிட்ட ஒப்பந்த படி மீதமுள்ள தொகையான ரூ.30 லட்சத்தை என் தகப்பனார் பெற்றுக்கொண்டு அவருடைய சகோதரரான பாஸ்கரன் என்பவர் பெயரில் கடந்த 31.07.2017 ம்தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. அந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. 2015 ம் ஆண்டு நாங்கள் கூட்டுக்குடும்பத்தை விட்டு வெளியே வந்த பிறகு என் தகப்பனாரும் , என் தாயாரும், நானும், என்னுடைய இரண்டு தம்பிகளும், தங்கைகளும் சேர்ந்து தனியாக ஒரு வீட்டில் கூட்டாக தான் வசித்து வந்தோம் என்று சொன்னால் அது சரிதான்.அந்த கால கட்டத்தில் அம்பிகா பயர் ஓர்க்ஸ் நிறுவனம் நடத்தி வந்த விபரம் பற்றியும் என் தாயார் பெயரில் அந்த நிறுவனத்திற்கு GST Number கொடுத்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியும். பிராது சொத்துக்களின் பேரில் என் தகப்பனாருக்குரிய பாகத்தை பொறுத்து அவர் அவருடைய சகோதரரான பாஸ்கரன் என்பவரிடமிருந்து தொகை ரூ.45 லட்சம் பெற்றுக்கொண்டு அந்த தொகையில் இருந்து தான் என் தாயார் பெயரில் அம்பிகா பயர் ஓர்க்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வரப்பெற்று என் தாயார் பெயரில் GST Number வழங்கப்பட்ட விபரமும் எனக்கு நன்றாக தெரியும் என்றும் தற்போது அதற்கு மாறாக நாங்கள் வழக்குரையை தாக்கல் செய்து நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. 16.12.2015 ம் தேதியில் பிராது சொத்துக்களின் பேரில் என் தகப்பனாருக்கு பாகமான 1/7 பங்கு பாகத்தை பொறுத்து ரூ.45 லட்சத்தை அவருடைய பங்குக்கு ஈடாக பெரியவர்கள் முன்னிலையில் பேசி அந்த வகையில் ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டு அந்த வகையில் என் தகப்பனாரும் ரூ.45 லட்சத்தை பெற்றுள்ளார் என்றும் அந்த வகையில் 16.12.2015 ம் தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தில் என் அப்பாவும் , அம்மாவும் கையொப்பம் செய்துள்ளார் என்றும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் அதற்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணப்படிக்கு என் தகப்பனார் அவரது சகோதரரான பாஸ்கரன் என்பவருக்கு 1/7 பங்கு பாகத்தை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளதால் என் தகப்பனாரின் பாகமான அந்த 1/7 பங்கானது மேற்படி பாஸ்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது தனித்த சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் அது சரிதான். 2015, 2017, 2018 ஆண்டு வாக்கில் தொகை ரூ.45 லட்சத்தை வைத்துக்கொண்டு தான் என் தகப்பனார் எனக்கு தேவையான 40 பவுன் நகையை வாங்கி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் எனக்கு 40 பவுன் நகையை வாங்கி கொடுத்துள்ளார் என்றும் நான் வழக்கிற்காக வேண்டி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2015 ம் ஆண்டு காலகட்டத்தில் இந்த வழக்குரை 1 முதல் 3 அயிட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.3 கோடியே 15 லட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு அதில் என் அப்பாவின் 1/7 பங்குக்கு ஈடாக தொகை

ரூ.45 லட்சம் என்று பேசி அந்த வகையில் 16.12.2015 தேதியில் ஒரு ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் அது சரிதான். நான் வழக்குரையில் பிராது 1 வது லக்க சொத்து மதிப்பாக ரூ.50,21,000/- என்றும் பிராது 2 லக்க சொத்தின் மதிப்பு ரூ.75,19,000/- என்றும் காட்டியுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1,2 லக்க சொத்தையும் சேர்த்து அதன் மொத்த மதிப்பு ரூ.1,25,40,000/- என்று தான் வருகிறது என்றும் ஆனால் நான் பிராதில் மொத்த மதிப்பாக ரூ.1,12,54,000/- என்று வழக்குரையின் சொத்து மதிப்பாக காட்டப்படுள்ளது என்றும் அது தவறான சொத்து மதிப்பு என்று சொன்னால் அது சரியல்ல. அதில் வாதிகளுக்கான பாக மதிப்பாக ரூ.12,05,786/- என்று காட்டப்படுள்ளதும் தவறான சொத்து மதிப்பு என்று சொன்னால் அது சரியல்ல. எனவே சொத்துக்களின்வழக்கீட்டு மதிப்பை தவறாக சொல்லி நாங்கள் இந்தவழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தவறானது என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் ஓரியன்ட் பயர் ஒர்க்சில் வேலை பார்த்து தாவா 2 ம் அயிட்ட சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்தாக வாங்கினார் என்று வழக்கில் கூறியிருப்பது பொய் என்றும் சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் படித்துவிட்டு சிவில் சர்வீஸ் தேர்வை எழுதுவதற்காக படித்துக்கொண்டிருந்தார் என்றும் அதன் பிறகு அவர் சென்னையில் வேலை செய்துவந்தார் என்று சொன்னால் சரிதான். பிராது 2 ம் அயிட்ட சொத்தானதை என் தகப்பானரின் உழைப்பால் கிரையம் வாங்கப்படவில்லை என்றும் என்தக்கபனார் ஓரியன்ட்ல் பயர் ஒர்க்சில் வேலை பார்க்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 2 வது லக்க சொத்தை பொறுத்தமட்டில் என் தகப்பனாருக்கு எந்தவிதமான பங்குபாகம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் தாவா சொத்துக்களில் இருந்து அவருடைய பாகத்தை பொறுத்தமட்டில் அவருடைய தம்பியான பாஸ்கரன் என்பவரிடமிருந்து தொகையை பெற்றுக்கொண்டு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டதால் பிராது சொத்துக்களில் எங்களுக்கு எந்தவிதமான பங்கு பாக பாத்திய உரிமை இல்லை என்று சொன்னால் அதுசரியல்ல. 2015 ம் ஆண்டிலேயே என் தகப்பனார் அவருடைய பங்கை பெற்றுக்கொண்டு நாங்கள் கூட்டுக்குடும்பத்தில் இருந்து பிரிந்து தனிக்குடித்தனமாக சென்ற பிறகு 2023 ம் ஆண்டு நாங்கள் பிராது சொத்துக்களின் பேரில் கூட்டுக்குடும்பமாக இருந்து அனுபவித்து வருவதாக சொல்லி இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் 3 ம் எதிர்வாதியாக இருந்து தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தனக்கு கூட்டுக்குடும்ப சொத்தில் உள்ள தனக்குரிய பங்கு தொகையை பெற்றுகொண்டு தான் தன்னுடைய சகோதரரான பாஸ்கரன் என்பவருக்கு தானம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துகொள்ள எங்களுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வழக்கில் நாங்கள்கேட்டுள்ள எவ்வித பரிகாரமும் எங்களுக்கு கிடைக்க கூடியதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல இவ்வழக்கில் நாங்கள் சொல்லியுள்ள சொத்துவிபரமும், வழக்குமூலமும், செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணமும்

தவறானது என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.2 முதல் வாசாஆ.4 வரையிலான ஆவணங்கள் ஜெராக்ஸ் ஆவணங்களாக உள்ளதால் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 26th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.